**செய்தி வெளியீடு எண்:377** **நாள்: 16.06.2017**

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மாநில அளவில் சிறப்பாக பணிபுரிபவர்கள் மற்றும் நிறுவனங்களை தேர்வுக் குழு மூலம் தேர்வு செய்து, இவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ஊக்குவித்து கௌரவிக்கப்படுவதால், அதனை கண்டு தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பணிபுரிபவர்கள் மேலும் சிறப்பாக பணிபுரிய வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தும் பொருட்டு, கீழ்காணும் விருதுகள் சுதந்திர தின விழா 15 ஆகஸ்டு 2017 அன்று வழங்கப்படவுள்ளன.

| வ.எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக அரும்பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர். | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், ரூ. 25,000/– ரொக்கப் பரிசு மற்றும் சான்றிகழ். (மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் வழங்கப்படும்) |
| 2. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம். | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம்,ரூ. 50,000/– ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் |
| 3. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த மருத்துவர். | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், மற்றும் சான்றிதழ் |
| 4. | மாற்றுத் திறனாளிகளுக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், மற்றும் சான்றிதழ் |
| 5. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறப்பு சமூகப்பணியாளர். | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், மற்றும் சான்றிதழ் |
| 6. | சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், மற்றும் சான்றிதழ் |

மேற்காணும் விருதுகள் பெற, மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம், லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,

திருவல்லிக்கேணி, சென்னை –5 அல்லது அந்தந்த மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்களிடம் விண்ணப்பம் பெற்று, விண்ணப்பங்கள் மற்றும் உரிய சான்றுகளுடன், சம்மந்தப்பட்ட மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடம் பரிந்துரை பெற்று மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை அவர்களுக்கு 30.06.2017க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**